மிக முக்கியம் : 2022 ஜூலை 19ம் திகதி

# சிசு சவிய 2022

**5**

## 5ம் தர மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை

சப்பிரகமுவ மாகாணம்

## முன்னோடிப் பரீட்சை

**வினாத்தாள் II** **1 மணித்தியாலம் 15நிமிடம்**

**பெயர் :..........................................................................................**

## சப்பிரகமுவ கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 61 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.
- விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விசேட அறிவித்தல்கள் (கவனத்திற்கு)

**பாடசாலை அதிபர் / ஆசிரியர்களுக்கு,**

- இவ்வினாப்பத்திரத்தை பிரதியிட்டு 2022 ஜூலை 19ம் திகதி உங்கள் பாடசாலையின் தரம் 05 சகல மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள்,பிரச்சினைகள் இருப்பின் தங்களது கோட்டத்திற்கு பொறுப்பான ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் மாகாண ஆரம்பப்பிரிவிற்கு அழைத்து ஆலோசனைகளை பெறுங்கள்.
- விடைப்பத்திரம் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- வேறு மாகாண மாணவர்களும் இவ்வினாப்பத்திரத்தின் பயனைப் பெறலாம்.
- இவ் வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி.

- மாகாண பணிமனையினால் வழங்கப்பட்டுள்ள பகுப்பாய்விற்கு அமைய புள்ளிகளை பதிவு செய்யுங்கள்.
- 2022 ஜூலை 19ம் திகதி பாடசாலையிலிருந்து விடையளிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.

| வினாத்தாள் 1 | வினாத்தாள11 |
|---|---|
| 1மணித்தியாலம் | 1மணித்தியாலமும் 15 நிமிடமும் |

- புள்ளி பகுப்பாய்வின் பின் மாணவர்களுக்கான இனங்காணப்பட்ட மேலதிக கற்றல் மேம்பாடுகளை மேற்கொள்க.
- இவ்வினாப்பத்திரத்தை எழுத சந்தர்ப்பம் இல்லாத மாணவர்களுக்கு வீட்டிலிருந்து செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

**சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக்கல்விப்பிரிவு**

**01** பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

<u>வெள்ளாடொன்று ஒரு காட்டில் வாழ்ந்து வந்தது</u>. தனக்கு உணவாக புற்களைத் தேடி பாறைகள் நிறைந்த மலை மீது ஏறிக் கொண்டு இருந்தது. புற்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் சென்ற வெள்ளாட்டுக்கு அங்கு ஏமாற்றமே காத்திருந்தது. வெள்ளாடு எதிர்பார்த்த மாதிரி அங்கே புற்கள் அவ்வளவாக இல்லை.

1. வெள்ளாடு எங்கு வாழ்ந்து வந்தது?
   ………………………………………………………………………………
2. ஆடு எதனைத் தேடி மலை மீது ஏறியது?
   ………………………………………………………………………………
3. "புற்கள்" என்ற சொல்லில் உள்ள உயிர்குறியின் பெயரை எழுதுக.
   ………………………………………………………………………………
4. பெயர் அடைமொழி சொல் ஒனறு பந்தியில் இருந்து எழுதுக.
   ………………………………………………………………………………
5. "நம்பிக்கை" என்பதன் எதிர்கருத்து யாது?
   ………………………………………………………………………………
6. பந்தியில் கோடிடப்பட்டுள்ள வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.
   …………………………………………………………………(புள்ளிகள் 06)

**02.** மாறிக் கிடக்கும் சொற்களைக் கொண்டு சரியான வாக்கியம் எழுதுக.

தமிழாசிரியர்/ என்ற/ காட்டினார்/ அழகிய சிரிப்பு/ பாடலைப் / பாடிக்

…………………………………………………………………………(புள்ளிகள் 01)

**03.** கீழ் உள்ள வாக்கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்புகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடையாளமிடுக.

1. கரீம் சிறந்த பாடகர். ( )
2. நீ பாட்டுப்பாடி ஆடுங்கள் ( )

(புள்ளிகள்02)

**04.** நிறுத்தற் குறிகளை உரிய இடத்தில் இடுக.

சூரியன் சந்திரன் அக்கினி என்பன முச்சுடர்களாகும் (புள்ளிகள் 01)

**05.** **1.** பழமொழியினை பூர்த்தி செய்து எழுதுக.

தாயிற் ……………… கோயிலுமில்லை.

**2.** "ஆழமறியாமல் காலை விடாதே" பழமொழியின் கருத்தை எழுதுக. (புள்ளிகள்02)

……………………………………………………………………………………

**06.** "கண்திறத்தல்" என்ற மரபுத்தொடரின் கருத்தை எழுதுக. **(புள்ளிகள் 01)**

……………………………………………………………………………………

**07.** பின்வரும் தொடர்மொழிக்கு ஒரு மொழியை தருக.

1. பகையரசனுக்கு கொடுக்கப்படும் திறைப்பொருள். …………………………………..
2. அறிஞர்கள் வாதிடும் களம்……………………………………(புள்ளிகள் 02)………

**08.** கீழ் உள்ள ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. .பேருந்து வேகமாக சென்றது.

………………………………………………………………………………………

. 2. .பட்டம் காற்றில் ஆடி அசைந்தது.

……………………………………………………………………………(புள்னிகள்02)……

**09.** ஆண்பால் சொல் எழுதுக.

1.பாங்கி ……………………. 2. நடிகை …………………………………

10. <u>வீதியில்</u> வாகனங்கள் வரிசையாகச் சென்றன. கோடிட்ட சொல்லின் ஒத்த சொல் எழுதுக.

……………………………………………………………………………………………….

**11.** இணைமொழியியை பூரணப்படுத்துக.

1. பாலும் ………………………… 2.குன்றும் ………………………………………...

**12.** கீழ் வரும் பேச்சு மொழி சொற்களை திருத்தி எழுத்து மொழி சொற்களாக எழுதுக.

1.பதட்டம்………………………… 2. வெத்திலை ……………………………….. **(புள்ளிகள் 07)**

**13.** கீழ் உள்ள படங்களுக்குறிய ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

1  ……………………..

2.  ………………………..

**14.** கீழ் உள்ள சொற்களைக் ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியமாக எழுதுக.

1. legs / I / have / four - ............................................................
2. is / This / brother /my - ............................................................

**15.** இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. This .................... (is / are) my school.
2. He .................. (have / has) blue shirt.

**16.** ''பங்குவ'' என்ற சிங்கள சொல்லின் தமிழ் சொல்லை எழுதுக. ……………………………..

**17.** கீழ் உள்ள தமிழ் வாக்கியத்தினை சிங்களத்தில் கூறும் விதத்தினை தமிழ் மொழியில் எழுதுக.

''எனக்கு தண்ணீர் வேண்டாம்'' - ……………………………………………………

(புள்ளிகள்08)

18. "நான் கூண்டில் அடைக்கப்பட்ட கிளி ஆவேன்" என்னும் தலைப்பில் ஆக்கப்பூரவமான வசனங்கள் மூன்று எழுதுக. (எல்லா வசனங்களிளும் எழுவாய், பயனிலை தொடர்பாகவும் ஐந்து சொற்களுக்கு மேலாகவும் இருக்க வேண்டும்.)

1……………………………………………………………………………….

2.……………………………………………………………………………….

3.……………………………………………………………………………(புள்ளிகள்06)

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

19. 1. "அறுபத்தொன்பதாயிரத்து பத்தொன்பது" எண் குறியீட்டில் எழுதுக.

……………………………………………………………………………………….


2. 98 725 வட்டமிடப்பட்ட இலக்கத்தின் இடப்பெறுமானத்தை எழுதுக.


………………………………………………………………………………………

20. கீழ் உள்ள எண்களை இறங்கு வரிசையில் எழுதுக.


7685, 7991, 7783 - ……………………………………………………….


21. கீழுள்ள உருக்களின் எண்ணிக்கையை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

1.  ………….

2.  ………..

22. 1. கீழ் உள்ள உருக்களை பயன்படுத்தி உருவாக்கக் கூடிய திண்மத்தின் பெயரை எழுதுக.


 ……………………………………………….

2. இதில் சமச்சீர் கோடுகள் இரண்டு வரைக. 

23. கவீன் 17km 700m தூரத்தை பேருந்திலும் 4km 500m தூரத்தை முச்சக்கர வண்டியிலும் பயணம் செய்தான். அவன் பயணம் செய்த முழுத் தூரம் எவ்வளவு?...............................................

24. குமார் கொண்டு வந்த செங்கறகளை 4 சமனான குவியல்களாக பிரிக்கப்பட்டன. ஒரு குவியலில் 493 செங்கற்கள் எனின் கொண்டுவந்த மொத்த செங்கற்கள் எத்தனை?

…………………………………………………………………………………………………

25. 

1. நிழற்றப்படாத பகுதியை பின்னத்தில் எழுதுக.

…………………………………………………...

2. 36மாம்பழங்களில் $\frac{3}{4}$ விற்கப்பட்டன. எஞ்சிய மாம்பழங்கள் எத்தனை?..................................................................(புள்ளிகள்11)

26. வியாபாரி ஒருவர் ஒரு தென்னந்தோட்டத்தில் 1530 தேங்காய்களும் இன்னொரு தென்னந் தோட்டத்தில் 1476 தேங்காய்களையும் வாங்கினார். அவர் வாங்கிய தேங்காய்களுக்கு இடையிலான வித்தியாசம் யாது?..........................................................................................................................

27. **குமார் 18:30 மணிக்கு புத்தகத்தை வாசிக்கத் தொடங்கி 23:00 மணிக்கு வாசிப்பதை நிறுத்தினான்.**

இரு நேரங்களையும் 12 மணித்தியால கடிகார நேரத்தில் எழுதுக.

1. 18:30 -……………………  2. 23:00 - …………………………………..

28. எள்ளுருண்டை 664ஐ ஒருவருக்கு 6 வீதம் பங்கிட்டால், எத்தனைப்பேருக்கு பங்கிடலாம்?
…………………………………………………………………………(புள்ளிகள்04)

29. கீழுளள சிட்டையை பூரணப்படுத்துக.

| பொருள் | 1kg இன் விலை | | அளவு | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| கிழங்கு | 260 | 00 | 500g | ------------- | ------------- |
| போஞ்சி | 250 | 00 | 2 kg | ------------- | ------------- |
| பருப்பு | 360 | 00 | 250 g | ------------- | ------------- |
| **மொத்தம்** | | | | ------------- | ------------- |


(புள்ளிகள் 08)

பொருந்களை வாங்கிய பின் 1000.00 ரூபாவைக் கொடுத்தால் மீதிப்பணம் எவ்வளவு?......................

30. இரு போத்தல்களில் முறையே 325ml, 875ml அளவு தோடம்பழரசம் இருந்தது.

1. இரு போத்தல்களிலும் உள்ள தோடம்பழரசத்தின் மொத்த அளவு யாது?..........................

தோடம் பானம் 2/ தயாரிபதற்கு மேலுள்ள தோடம்பழரசத்திற்கு எவ்வளவு நீர் இடவேண்டும்?.......................................................................................... (புள்ளிகள் 03)




31 ஒரு மணித்தியாலயத்திற்குள் பாதையில் பயணித்த வாகனங்களின் விபரம்.

1) பயணித்த வண்டி 9 ஆகும். இதனை வரைபில் நிழற்றி காட்டுக.

2) பாதையில் பயணித்த முழு வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

...........................................................................................

(புள்ளிகள் 04)

- **இலக்கம் 32 தொடக்கம் 61 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

32.ஏதாவது ஒரு காரியத்தை குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க முடியாது போனால் ஏற்படும் பாதிப்பு?

1. உள ஆரோக்கியம் ஏற்படல்.
2. வேலையை முழுமையாக நிறைவேற்ற முடியாது.
3. ஏனையோரிடம் மதிப்பு ஏற்படல்.

33. எம்மால் கடைபிடிக்க கூடிய நடத்தைகளில் ஒன்று.

1. மூத்தோரிடம் மரியாதை இல்லாது பேசுதல்.
2. சப்தம் ஏற்படும் வகையில் உணவு உண்ணுதல்.
3. மூத்தோரைக் கண்டு எழும்புதல்.

34. தேசியக் கொடியில் மஞ்சள் நிறப்பின்னனியில் உள்ள சிங்கம் உரு உணர்த்துவது.

1. தேசிய வீரம். 2. சிங்கள மக்களை உணர்த்துகின்றது.
3. தேசிய ஒற்றுமை.

35. தேசிய இலட்சினையில் நிறைகுடம் உணர்த்துவது.

1. சௌபாக்கியம் 2. தன்னிறைவு 3.நிலைத்திருத்தல்

36. இலங்கையின் உயரமான மலையும் உயரமான நீர்வீழ்ச்சியும் முறையே அமைந்துள்ள விடை.

1. கிரிகெல்பொத்த, பம்பரகந்த 2. பம்பரகந்த, தியலும
3. பீதுருதாலகாலை, பம்பரகந்த


37. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அதிவேகப்பாதை எது?


1. கட்டுநாயக்க அதிவேகப்பாதை 2. தெற்கு அதிவேகப்பாதை
3. கொழும்பு - கண்டி அதிவேகப்பாதை

38. காற்று வளி மண்டல சூழலில் நடமாடும் பிராணிகள் யாவை?

1. தேனீ, வண்ணத்துப்பூச்சி, குருவி 2. ஈ, உண்ணி, அணில்
3. குருவி, மீன், யானை

39. அதிக பிரகாசமான ஒளி தரும் சுற்று.


A


B


C

1. A 2. B 3. C

40. தொடர்பாடல் ஒன்று நடைபெற கட்டாயம் மூன்று விடயங்கள் தேவை. அவை?

1. அனுப்புவோன், கடிதம், எழுதுவோன்.
2. கடிதம் எழுதுவோன், கடிதம், கடிதம் பெறுவோன்
3. ஊடகம், அனுப்புவோன், பெறுவோன்

41. தரம் ஒன்று தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை ஏற்படுத்திக் கொடுத்த தேசிய வீரர்களில் ஒருவர்..

1. எம்.மகிந்ததேரர் 2. C. w. w. கன்னங்கர 3.ஆதர்சிகிளாக்

42. வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையின் போது செவ்வந்தி தாவரம் நடுவதற்கான பிரதான நோக்கம் எது?

1. வீட்டுத்தோட்டம் அலங்கரிப்பதற்கு
2. பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பிராணிகளை விரட்டுவதற்கு.
3 வீட்டுத்தோட்டம் முழுமையான பயனைப் பெறுவதற்கு

43. கமுகு, பலா, எண்ணை ஆகிய வித்துக்கள் பரம்பலடையும் முறை எவை ?

1. பிராணிகள், நீர், காற்று
2. நீர், விலங்குகள், காற்று
3. வெடித்து, விலங்குகள், நீர

44. உடல் வளர்ச்சிக்கு தேவையான உணவுத் தொகுதி யாது?


1. சோறு, பால், வல்லாரை 2. இறைச்சி, மீன், பால் 3. கௌப்பி, பாண், சோறு


45. மகா சிவராத்திரி, ஹஜ்பெருநாள் கொண்டாடும் சமயத்தவர்கள் முறையே.

1. இஸ்லாமியர், இந்துக்கள்
2. இந்துக்கள், இஸ்லாமியர்
3. பௌத்தர்கள்,கத்தோலிக்கர்கள்.


46. ஊசித்துளை கெமராவில் பார்க்கும் போது மரம் தோன்றும் விதம்.

1. 

2. 

3. 

47. கீழ் உள்ள செயற்பாட்டின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது?




1. நீரில் உள்ள நிறங்கள் தொடர்பானது
2. சூரிய ஒளியில் உள்ள நிறங்கள் தொடர்பானது
3 கண்ணாடியினுள் வெளிப்படும் ஒளி

48. 

இப் படத்தில் காட்டப்படும் தேசிய வீரா்?


1. சேர் கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
2. C. w. w. கன்னங்கரா
3. T.B. ஜாயா

49. பாதணியை கலட்டிவிட்டு வீட்டுக்குள் நுளைவது நலல பழக்கமாவது ஏன்?

1. பாதணியை கலட்டி விடுவதன் மூலம் பாதங்களுக்கு சொகுசு கிடைப்பதற்கு.
2. பாதணிகளில் உள்ள கிருமிகள் வீட்டுக்குள் நுளைவதை தடுப்பதற்கு
3. மறுநாள் பாதணியை தேடிக்கொள்ள இலகுவாக இருப்பதற்கு.

50 .கீழ் உள்ள காந்தம் ஒன்றை ஒன்று கவராத சந்தர்ப்பம். எது?

1 


2 


3 


51. பான வகை தயாரிப்பதற்கு பயன்படுத்துவது?

1. விரலிப்பழம், கெக்கரி 2. வல்வாரை, சத்தாவாரி 3.வில்வம்பூ, பொன்னாவரை

52. தண்டு, வேர் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் முறையேஅமைவது.

1. வெற்றிலை, பசளி 2.மா,எலுமிச்சை 3. பசளி, ஈரப்பலா

53. பீரிஸ் கோப்பை ஒன்றில் உப்பு நீர சிறிதளவு இட்டு வெயிலில் வைக்கும்போது ஏற்பக்கூடிய மாற்றம்.

1. நீர் அடங்கிய பீரிஸ் கோப்பை
2. வெற்று பீரிஸ் கோப்பை
3. உப்புள்ள பீரிஸ் கோப்பை

54.பயிர்ச்செய்கைக்கு தீங்கு விளைவிக்கும் பறவைகளை விரட்ட பயன்படுத்தும் கருவி?

1. சுழல் சக்கரம் 2. நீர்ச்சில்லு 3.காற்றுக்கிளுக்கி

55. இலங்கையில் முதலாவது அமைக்கப்பட்ட குளம் மற்றும் மன்னன்.

1. பசவக்குளம், பண்டுகாபய மன்னன்
2. அபயவாவி, துட்டுகைமுனு மன்னன்
3. மின்னேரியா குளம், மகாசேன மன்னன்

56. பனிக்கட்டி பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் ஒன்று.

1. கீரை வகைகளை பழுதடையாது பாதுகாத்தல்.
2. மீன் பழுதடையாது நீண்டகாலம் பயன்படுத்தல்.
3. உளர் உணவுகளை பழுதடையாது பாதுகாத்தல்.

57. பாதுகாப்பற்ற இடமும், பாதுகாப்பற்ற சந்தர்ப்பமும் முறையே அமைந்த இடம்.

1. பாம்பு இருக்கும் புற்று, பாதையில் இடது பக்கமாக செல்லுதல்.
2. பட்டாசு கொழுத்துதல், பாதையில் வலது பக்கமாக செல்லுதல்.
3. மண்சரிவு ஏற்படும் இடம், பாம்பு வசிக்கும் புற்று

58. .இந்த உபகரணத்தில் காந்த சக்தியை அதிகரிக்க செய்ய வேண்டிய ஒன்று.




1. மின்கலங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
2. கொயில் கம்பியின் சுற்றுக்களை அதிகரித்தல்
3.கொயில் கம்பியின் சுற்றுக்களை குறைத்தல்.

59.நீர் சில்லின் வேகத்தை அதிகரிப்பதற்கு செய்ய வேண்டிய ஒன்று.

1. நீர் தாரையின் வேகத்தை அதிகரித்தல்.
2. நீர் தாரையின் வேகத்தை குறைத்தல்.
3. நீர் சில்லின் பற்களின் எண்ணிக்கையை குறைத்தல்.

60.இப்பரிசோதனை மூலம் விளங்கிக் கொள்வது



1. காந்தங்களில் உலோகம் கவர்தல்.
2. காந்தங்களில் உலோகம் தள்ளுதல்.
3. காந்தங்களில் கவர்தல், தள்ளுதல்.

61. ஆதிவாசிகள் தமது தொடர்பாடலுக்காக பயன்படுத்தப்பட்ட உத்திகள்?

1. கொடி ஏற்றுதல், தொலைபேசி பயன்படுத்தல், கணினி பயன்படுத்தல்.
2. ஒலிபெருக்கி, வாயின் ஊடாக, தீமூட்டுதல்
3. கொடி ஏற்றுதல், வாயின் ஊடாக, பிராணிகள் மூலம்.

(புள்ளிகள் 30)